## 19

# ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் "ஊக்கமூட்டுதலுக்கான ஒரு வார்த்தை"

## [10:19-25]

*"நிழல் மற்றும் பொருள் என்ற நமது பாடம், எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் இறையியல் பகுதியை அடிப்படையாக முடித்து வைத்தது." இந்தப் புத்தகத்தில் எஞ்சியுள்ள 3½ அதிகாரங்களில், எழுத்தாளர் தாம் கூறியிருந்தவற்றின் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துதல் என்பதே அவரது முதன்மை நோக்கமாக இருந்தது. நாம் போதிக்கும்போது, பேசப்படாத கேள்வி ஒன்று எப்போதும் உள்ளது: "இந்த சத்தியங்கள் நம்மீது எவ்வாறு செயல்விளைவை ஏற்படுத்த வேண்டும்?" யூதத்துவத்தைக் காட்டிலும் கிறிஸ்தவம் மேன்மையானதாக உள்ளது என்றால், அது நமது அன்றாட வாழ்வில் ஏற்படுத்த வேண்டிய மாற்றம் என்ன? அதையே நமது வசனப்பகுதி நமக்குக் கூறவிருக்கிறது!*

*நடைமுறை போதனைப் பகுதியானது - முன்பு வந்தது என்ன என்பதைத் தொகுத்துரைக்கும் மற்றும் பின்பு வருவது என்ன என்பதை முன்னெதிர் நோக்கும் - ஒரு அறிமுக உரையுடன் - 10:19-25 - தொடங்குகிறது. எபிரெயருக்கு எழுதிய நிருபத்தை "ஊக்கமூட்டுதலின் வார்த்தை" என்று நான் அழைக்கையில், நான் அர்த்தப்படுத்துவது என்ன என்பதை இவ்வசனங்கள் விவரிக்கின்றன. "ஊக்கமூட்ட" என்பது ஆறுதல்படுத்த மற்றும் பெலப்படுத்த என்று அர்த்தப்பட முடியும் அல்லது அது புத்திகூற மற்றும் வேண்டிக்கேட்டுக்கொள்ள[1] என்று அர்த்தப்படுத்த முடியும் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.*

### நம்மை ஆறுதல் படுத்தி பெலப்படுத்தும் வார்த்தைகள் (10:19-22)

*எபிரெயர் 4:14-16ல் நாம், இயேசு ஒரு பரிதபிக்கும் பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்று கற்றறிந்தோம். ஆகையால் நாம் "இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேர" முடியும் (வசனம் 16). 4ம் அதிகாரத்தில் காணப்பட்ட சிந்தனையை, நமது தற்போதய வசனப் பகுதி விரிவாக்குகிறது. இந்த இடம் வரையிலும், இந்த நிருபம், பரலோகத்து பரிசுத்த ஸ்தலம் அல்லது இயேசுவின் இரத்தம் பற்றிக் கலந்துரையாடவில்லை; ஆனால் அந்த இரண்டு ஆய்வுக்கருத்துக்களும்,*

*10:19-22ன் ஆறுதல்தரும் வார்த்தைகளில் பொதியப்பட்டுள்ளன.*

*இயேசுவினுடைய பலியின் காரணமாக நாம், தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்க முடியும் (10:19). லேவியத்துவ பிரதான ஆசாரியர் (ஆரோனின் வழித்தோன்றல்களில் ஒருவரான லேவியர் ஒருவர்), பயத்தோடும் நடுக்கத்தோடும் மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தார், ஆனால் நாம் தேவனுடைய பிரசன்னத்திற்குள் தைரியமாகப் பிரவேசிக்க முடியும், ஏனென்றால் ...*

- *இயேசு நமக்கு மார்க்கத்தைத் திறந்தார் (வசனம் 20). அது, பழைய ஏற்பாட்டின் மரித்துபோன பலிகளின் மார்க்கத்திற்கு நேரெதிரான வகையில், ஜீவனுள்ள மார்க்கமாக உள்ளது.*
- *இயேசு ஒரு பரிதபிக்கும் பிரதான ஆசாரியராக இருக்கிறார் (வசனம் 21). அவர் "தேவனுடைய வீட்டின்மேல்" - பூமியின்மீது தேவனுடைய குடும்பத்தின்மேல் (சபையின்மேல்) - மற்றும் பரலோகத்தில் தேவனுடைய குடும்பத்தின்மேல் அதிகாரியாக இருக்கிறார் (காண்க எபேசியர் 3:15).*
- *இயேசுவின் இரத்தம் நமது பாவங்களில் இருந்து நம்மைச் சுத்தி கரித்துள்ளது. நமது மனச்சாட்சிகள் சுத்தமானவையாக உள்ளன (வசனம் 22; காண்க 9:14).*

## நமக்கு புத்திகூறி நம்மை வேண்டிக் கேட்டுக்கொள்ளும் வார்த்தைகள் (10:22-25)

*22ம் வசனத்தில் தொடங்கி, இவ்வசனப்பகுதி, நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்யும்படியும் நாம் இருக்க வேண்டியபடி இருக்கும்படியும் நம்மை ஊக்கப் படுத்துகிறது. "செயல்விளைவில் நமக்கு [வசனங்கள் 19-21ல் உள்ள] விஷயங்கள் உண்மையாக இருப்பதால், நாம் இதையும் அதையும் (வசனங்கள் 22-25 உள்ளவற்றை) செய்யக்கடவோம்" என்றே கூறப்படுகிறது. வேதாகம எழுத்தாளர் வாக்கியங்களின் முடிவில் "கடவோம்" என்பதை எழுத விரும்பினார். 22 முதல் 25 வரையுள்ள வசனங்களில் நாம், "கடவோம்" என்பதை மூன்று முறை காண்கிறோம்.*

### "சேரக்கடவோம்": நாம் ஆராதிக்கக் கடவோம் (10:22)

*கிறிஸ்தவத்துடன் ஒப்பிடுகையில், யூதத்துவம் சிறிதளவு உறுதிப்பாட்டையே அளித்தது. இயேசுவின் மூலமாக நாம் உறுதிப்பாட்டைக் கொண்டிருக்கிறோம். ஞானஸ்நானத்தின் தண்ணீரில் இருந்து நமது உடல்கள் எழுப்பப் படுகையில், பாவத்தில் இருந்து நமது இருதயங்கள் சுத்திகரிக்கப் படுகின்றன, மற்றும் நாம் தேவனை ஆராதிக்கத் தயாராக இருக்கிறோம்!*

### "அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்": நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கக் கடவோம் (10:23)

*அலைபாய்ந்து கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு இந்த நிருபம் எழுதப்பட்டது. அவர்கள் அலைப்பாய்வதை நிறுத்தி, தங்களுக்குத் தேவன் செய்திருந்த யாவற்றையும் ஆழ்ந்து சிந்திக்கும்படி இது*

அவர்களை வேண்டிக்கேட்டுக் கொண்டது. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவைகளாக இருப்பதால் அவர்கள் தேவனில் நம்பிக்கையாயிருக்க முடியும்.

**"ஒருவரையொருவர் கவனித்து ... புத்திசொல்லக்கடவோம்": நாம் ஒருவர் மற்றவரை ஊக்குவிக்கக் கடவோம் (10:24, 25)**

இந்த நிருபம் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்கள், தங்கள் சக கிறிஸ்தவர்களைப் பற்றிச் சிந்திக்காமல், சுயத்தை மையங்கொண்டவர்களாக இருந்தனர் என்பது உறுதி. *மற்றவர்களை* ஊக்குவிப்பது எப்படி என்று அவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியமாக இருந்தது (வசனம் 24).

சபைகூடிவருதல்களில் உண்மைநிறைந்த தன்மையுடன் கலந்துகொள்ளுதல் என்பது மற்றவர்களை ஊக்குவிப்பதற்கான ஒரு வழியாக உள்ளது. நாம் ஆவிக்குரிய வகையில் "தனிமையானவர்களாக" இருப்பதை கர்த்தர் நோக்கங் கொண்டிருக்கவில்லை. நாம் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பாகமாக, "ஒருவருக்கொருவர் அவயவங்களாக" (எபேசியர் 4:25) இருக்கிறோம். நாம் ஆராதனைக்கு ஒன்றுகூடி வரும்போது, நாம் மற்றவர்களை ஊக்கப்படுத்துகிறோம். நாம் அவ்வாறு செய்யத் தவறும்போது, நாம் அவர்களை ஊக்கம் இழக்கச் செய்கிறோம்.

எபிரெயர் 10:19-21 வசனப்பகுதி, முதல்நூற்றாண்டில் குறிப்பிட்ட கிறிஸ்தவர்களுக்கு ஊக்கமூட்டும் வார்த்தையாக எழுதப்பட்டது. இருந்தபோதிலும் அதே செய்தி உங்களுக்கும் எனக்கும் தேவைப்படுகிறது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், ஊக்கமூட்டப்பட வேண்டும், ஏனெனில் (1) "அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது" (வசனம் 19). (2) நாம், "இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார்" (வசனம் 20) மற்றும் (3) "தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான [இயேசு என்ற] மகா ஆசாரியர் நமக்கு ஒருவர்இருக்கிறார்" (வசனம் 21). ஆகையால் நாம், (1) "உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் தேவனிடத்தில் சேரக்கடவோம்" (வசனம் 22), (2) "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்" (வசனம் 23) மற்றும் (3) "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து ... ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்" (வசனங்கள் 24, 25).

---

குறிப்பு

[1]இந்தப் பாடத்தொடரின் "ஊக்கமூட்டுதலுக்கான ஒருவார்த்தை" என்ற அறிமுகப் பாடத்தில் "புத்திகூறுதல்" (எபிரெயர் 13:22) பற்றிய குறிப்புகளை மறுகண்ணோட்டமிடுங்கள்.

# *எபிரெயர் 10:25ன் மீது ஒரு நெருங்கிய பார்வை*

"*சபை கூடிவருதலை*" என்பது ஒன்றுகூடி பொதுவாக ஆராதிப்பதற்கான ஒரு குறிப்பாக உள்ளது. "கூடிவருதல்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள வார்த்தை, "ஜெப ஆலயம்" என்ற வார்த்தையை நாம் பெறும் வார்த்தையின் வினைச்சொல் வடிவமாக உள்ளது - இது தோற்றகால வாசகர்களின் யூதப்பின்னணியைப் பிரதிபலிக்கிறது. தொடக்கத்தில் இருந்தே கிறிஸ்தவத்தில், பொதுக் கூடுகைகள் முக்கியமானவையாக இருந்தன (காண்க நடபடிகள் 2:42; 20:7; 1 கொரிந்தியர் 16:1, 2; யாக்கோபு 2:2-4). ஒரு நபர் கிறிஸ்தவராகும்போது அவர், சபை என்ற ஒரு விஷயத்தின் பாகமாகிறார். படிப்பு, ஆராதனை மற்றும் ஐக்கியம் ஆகியவற்றிற்காக ஒன்றுகூடுதல் என்பது சபை உறவின் முக்கியமான பாகமாக உள்ளது. ஒருவர் மற்றவரை நேசிக்கும் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடிவர விரும்புகின்றனர். சரீரத்தின் ஒரு உறுப்பினர் அந்த கூடுகையைப் புறக்கணிக்கும்போது, அங்கு ஒரு பிரச்சனை உள்ளது.

"*சிலர் விட்டுவிடுகிறதுபோல*". "[*உங்களில்*]" சிலர் என்பது புரிந்துகொள்ளப் படவேண்டும். இந்தக் கிறிஸ்தவர்கள் தங்கள் சபைகூடிவருதலைப் புறக்கணிக்கத் தூண்டியது எது? அனேகமாக இன்றைய நாட்களில் சபை ஆராதனையில் கலந்து கொள்ளாதிருக்கும்படி உள்ள ஒவ்வொரு ஊக்குவித்தலும் அன்றும் இருந்திருக்கலாம். இருப்பினும் சில குறிப்பிட்ட காரணங்களை சந்தர்ப்பப்பொருள் கருத்தாகத் தெரிவிக்கிறது; உதாரணமாக, 10:32-34 வசனப்பகுதி உபத்திரவம் பற்றிப் பேசுகிறது. மேலும் யூதத்துவத்திற்குத் திரும்பிச் செல்லும்படி யூதக்கிறிஸ்தவர்கள் மீது வலியுறுத்தமும் இருந்தது. அவர்கள் கிறிஸ்தவ, சமூகத்தில் இருந்து தங்களைத் தூரத்தில் வைத்துக் கொள்ளும்படி - சபையில் கூடிவராது இருக்கும்படி (காண்க 10:25) மற்றும் கிறிஸ்தவ நடத்துனர்கள் கூறுவதைக் கவனிக்காதிருக்கும்படி (காண்க 13:7, 17) சக யூதர்களால் ஊக்குவிக்கப் பட்டிருக்கலாம்.

"*நாமும் விட்டுவிடாமல்.*" "விட்டுவிடுதல்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "பின்னால் விட்டுச் செல்லுதல், கைவிடுதல்" என்று அர்த்தப்பட முடியும். இந்தக் கருத்தில் இவ்வார்த்தை 13:5ல் இந்த அர்த்தத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது, மற்றும் அதுவே இவ்விடத்தில் அர்த்தமாக உள்ளது என்று சிலர் நம்புகின்றனர். அப்படியிருந்தால், வசனப்பகுதி முற்றிலுமான விசுவாச விலக்கத்தின் அடையாளம் ஒன்றைக் கொடுத்திருக்கலாம். இருப்பினும், நீல் லைட்ஃபூட் அவர்கள், "... விசுவாச விலக்கம் பற்றி எழுத்தாளர் பேசுகிறார் என்றால், *அது சிலரின் வழக்கமாக இருந்தது* என்று அவர் கூறியிருப்பது எப்படி?" என்று குறிப்பிட்டார்.[1] 26ம் வசனம் விசுவாச விலக்கம் பற்றிப் பேசுகையில், 25ம் வசனம் விசுவாச விலக்கத்தைத் *தவிர்க்கும்* வழிகளைக் குறிப்பிடுகிறது: "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்: நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (ஒப்பிடுக 2:1-4). RSV வேதாகமத்தில் "சபைகூடிவருதலைப் புறக்கணிக்காமல் ..." என்றுள்ளது.

"*ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்*" என்பது ஆராதனைக்கு

வரும்படி மற்றவர்களை ஊக்குவித்தல் என்று அர்த்தப்படாமல், மற்றவர்களை ஊக்குவிப்பதற்காக ஆராதனைக்கு வரும்படி புத்தி சொல்லுதல் என்று அர்த்தப் படுகிறது. முந்திய வசனங்கள் (10:19-22), ஆராதனையின் தனிப்பட்ட பயன்களைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன, ஆனால் மற்றவர்களின் பயனுக்காக நாம் சபைகூடுகையில் கலந்துகொள்வது அவசியம் என்று இந்த வசனம் நமக்குக் கூறுகிறது. டான் கிளிங்கென்பெர்க் அவர்கள், பின்பற்றத் தகுதியான ஒரு நடைமுறையைக் கொண்டிருந்தார். ஒவ்வொரு சபைகூடுகைக்கும் முன்னதாக அவர், தாம் ஊக்குவிக்க விரும்பும் மனிதர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கிறார். சிலவேளைகளில் எல்லாரும் ஒன்றுகூடியிருக்கையில், அவர்கள் ஒவ்வொருவருக்கும்அவர், "நீங்கள் ஒரு நல்ல மனிதர் என்று நான் நினைக்கிறேன், மற்றும் நீங்கள் இந்த வாரத்தில் தேவனுக்கென்று வாழும்படி உங்களை நான் ஊக்கப்படுத்துகிறேன்" என்று கூறுகிறார்.

"*நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.*" "நாள்" என்பது அனேகமாக கர்த்தரின் நாளை (ஞாயிற்றுக் கிழமையை) குறிப்பதில்லை எனலாம். சிலர், "நாள்" என்பது எருசலேமின் அழிவைக் குறிக்கிறது என்று நம்புகின்றனர். நாள் என்பது, கிறிஸ்துவின் மறுவருகை மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவற்றின் நாள் என்பதே புதிய ஏற்பாட்டில் மிகவும் பொதுவான அர்த்தமாக உள்ளது. நமது கருத்துநோக்கில் இருந்து, "நாளானது சமீபித்துவருகிறது" என்பது அந்த "கடைசி நாளாகவே" உள்ளது என்பது உறுதி. அந்த மகா நாளுக்கென்று நாம் யாவரும் தயாராக இருக்கும்படிக்கு, நாம் ஒருவர் மற்றவரை ஊக்கப்படுத்தும் விஷயமானது, காலம் செல்லச் செல்ல வலுப்பட வேண்டும்.

---

குறிப்பு

[1]Neil R Lightfoot, *Jesus Christ Today* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 191.